## இனிமையான குழந்தைகளே! நாம் இப்பொழுது இந்த உலகம் மற்றும் அனைத்தையும் விட்டுவிட்டு தன்னுடைய வீடான சாந்திதாமத்திற்குச் செல்லப்போகிறோம். பிறகு சுகதாமத்திற்கு வரப்போகிறோம் என்ற குஷி உங்களுக்கு இருக்க வேண்டும்.

கேள்வி: இந்த நுணுக்கமான (நாசூக்கான) வழியில் நிரந்தரமாக முன்னேறிச் செல்வதற்காக என்ன கவனம் அவசியம் இருக்க வேண்டும்?

பதில்: எப்பொழுதாவது யாராவது வீணான மற்றும் சைத்தான் (தவறான) விசயங்களைக் கூறினால், அவர்களுடைய நண்பன் ஆகாதீர்கள். ஆம் என்று சொல்லி தவறான விசயங் களைக் கேட்பது என்பது தந்தையின் கட்டளைக்குக் கீழ்படியாதவர் ஆகுவது ஆகும். ஆகையினால், கருணை உள்ளம் உடையவர் ஆகி, அவர்களுடைய பழக்கத்தை அழிக்க வேண்டும். தந்தையின் கட்டளைக்குக் கீழ்படிபவர் ஆக வேண்டும். ஞானத்தின் மை அணிந்து கொள்ள வேண்டும். இது மிகவும் நுணுக்கமான வழியாகும். இதில் கவனமாக செல்வதன் மூலம் முன்னேறிக்கொண்டே இருப்பீர்கள்.

பாடல்: இந்த பாவ உலகத்திலிருந்து......

ஓம்சாந்தி. இனிமையான குழந்தைகளே! இப்பொழுது நீங்கள் புத்திசாலி ஆகியிருக் கிறீர்கள் மற்றும் நாம் முன்னர் எவ்வளவு புத்தியற்றவர்களாக இருந்தோம் என்பதை உணர்கிறீர்கள். இது பதீதமான உலகம் மற்றும் இதே பாரதத்தில் எப்பொழுது தேவி தேவதைகளின் இராஜ்யம் இருந்ததோ, அப்பொழுது பாவனமாக சுகம் நிறைந்தவர்களாக இருந்தோம். அங்கே எந்த துக்கத்திற் கான விசயம் கிடையாது என்பது கூட புரியவில்லை. ஆனால், சொர்க்கத்தில் சதா சுகம் இருக்கும் என்ற இந்த நம்பிக்கை கூட இல்லாமல் இருந்தது. சொர்க்கத்தைப் பற்றி எவருக்கும் தெரியாமல் இருந்தது. அங்கேயும் துக்கம் இருந்தது என்று மனிதர்கள் நினைக்கின்றனர். இது அறிவற்ற நிலை ஆகும். இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் புத்திசாலி ஆகியிருக்கிறீர்கள். தந்தை வந்து புரிய வைத்திருக்கின்றார். அவருடைய ஸ்ரீமத்படி நீங்கள் நடந்துகொண்டு இருக்கின்றீர்கள். இது பதீத உலகம் ஆகும் என்று மனிதர்கள் கூறவும் செய்கின்றனர். சொர்க்கம் தூய்மையான உலகமாக இருந்தது. தூய்மையான உலகத்திலும் கூட துக்கம் இருக்கிறது என்றால் பிறகு, அது துக்கமான உலகமாகி விட்டது. பிறகு பாடல் கூட தவறானது ஆகிவிடுகிறது. ஹே பாபா! எங்கே ஓய்வு, சுகம் மற்றும் அமைதி உள்ளதோ அந்த இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் என்று கூறு கின்றனர். சொர்க்கம் தங்கக் குருவியாக இருந்தது என்பதையும் கூட குழந்தை களாகிய நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். தேவி தேவதைகள் இருந்தனர். நாம் ஒருவருக்கொருவர் துக்கம் கொடுக் காதவராக இருந்தோம் என்று கூறவும் செய்கின்றனர். ஆனால், பிறகு துக்கம், சுகம் ஆகிய அனைத்தும் பரம்பரையாக இருந்து வருகிறது என்று கூறிவிடுகின்றனர். கிருஷ்ணர் மீதும் பொய்யான களங்கத்தை ஏற்படுத்திவிட்டனர். பதீதமானவர்களின் திருஷ்டி (பார்வை) எவ்வாறு இருக்குமோ, அவ்வாறே சிருஷ்டி (உலகம்) இருக்கும் என்று கூறப்படுகிறது. முழு சிருஷ்டியும் (உலகம்) பதீதமாக உள்ளது என்று புரிந்திருக்கின்றனர். இந்த சமயம் அவர்களுடைய திருஷ்டியே பதீதமாக உள்ளதால் முழு

சிருஷ்டியையும் பதீதமாக உள்ளதாக நினைக்கின்றனர். இந்த பதீத நிலை பரம்பரையாக இருந்து வருகிறது என்று கூறுகின்றனர்.

இப்பொழுது குழந்தைகளாகிய உங்களுக்குள் புரிதல் வந்து கொண்டிருக்கிறது. அதுவும் வரிசைக் கிரமமான முயற்சியின் அனுசாரம் வந்து கொண்டிருக்கிறது. குழந்தைகளுக்கு பரமபிதா பரமாத்மா வின் வழிகாட்டுதல் (டைரக்ஷன்) கிடைக்கிறது. ஆத்மாக்களுக்கு தந்தை அமர்ந்து புரியவைக் கின்றார். அனைத்து ஆத்மாக்களும் பதீதமாக உள்ளனர். ஆகையினால், பதீத ஆத்மாவை பாவ ஆத்மா என்று கூறப்படுகிறது. நீங்கள் என்னுடைய அழிவற்ற குழந்தைகள் ஆவீர்கள் என்று தந்தை ஆத்மாக்களுடன் உரையாடுகின்றார். பிறகு, மம்மா, பாபா என்று கூட கூறுகிறீர்கள். இந்த உலகத்தில் எவரையும் பிதாஸ்ரீ என்று கூற முடியாது. ஸ்ரீ என்றால் சிரேஷ்ட மானவர் (உயர்ந்தவர்). ஆனால் இங்கே ஒரு மனிதர் கூட சிரேஷ்டமானவர் கிடையாது. ஒருவருக்கு மட்டும் தான் இந்த மகிமை இருக்க முடியும். நீங்கள் இவருக்கு (பிரம்மா) இந்த சமயத்தில் கூறு கிறீர்கள். ஏனெனில், சிரேஷ்டம் ஆகுவதற்காக சந்நியாசம் செய்திருக்கின்றார். நாம் இப்பொழுது பரிஸ்தா ஆகப்போகின்றோம் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். ஆனால், போகப்போக, சிரேஷ்டம் ஆகிக் கொண்டிருக்கும் பொழுதே மாயை இராவணன் அடிகொடுத்து பிரஷ்டம் (கீழான நிலை) ஆக்கிவிடுகிறது. பிரஷ்ட மானவர்களை ஸ்ரீ என்று கூற முடியாது. ஸ்ரீ இலட்சுமி, ஸ்ரீ நாராயாணர், ஸ்ரீ இராதை, ஸ்ரீ கிருஷ்ணர் என்று கூறுகின்றனர். கோவில்களில் கூட அவர் களுடைய மகிமை பாடுகின்றனர். தன்னை சிரேஷ்டமானவர் என்று கூற முடியாது. பாரதம் சிரேஷ்ட மானதாக இருந்தது என்பதை இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் புரிந்திருக்கிறீர்கள். அங்கே ஆத்மா அழுக் கில்லாமல் (அழுக்கில்லாத துணியாக) இருந்தது. சுத்தமானவர்களாக, சிரேஷ்ட மானவர்களாக இருந்தனர். அழுக்குத் துணியைத் துவைத்து தூய்மையாக்கிவிடுகின்றார் என்ற தந்தையின் மகிமை உள்ளது அல்லவா ! இந்த சமயமோ அனைவரும் பதீதமாக உள்ளனர். இது இராவண இராஜ்யம் ஆகும். மனிதர்கள் இராவணனை வருடாவருடம் எரிக்கின்றனர். ஆனால், எரிவதில்லை. மீண்டும் மீண்டும் எழுந்துவிடுகிறது. ஒருமுறை எரித்துவிட்ட பிறகு ஒவ்வொரு வருடமும் புதியதாக ஏன் உருவாக்குகின்றோம்? என்பது கூட மனிதர்களுக்குப் புரிவதில்லை. அதன் மூலம் இராவண இராஜ்யம் முடிவடையவில்லை என்பது நிரூபணமாகிறது. சொர்க்கத்தில் எப்போது இராம இராஜ்யம் நடக்கிறதோ, அப்பொழுது அங்கே இராவணனின் கொடும் பாவியை (உருவபொம்மை) உருவாக்கமாட்டார்கள். இராவணனை எரித்து பிறகு இலங்கையை வசப்படுத் தினார்கள் என்று கூறினர். இராவணனின் இலங்கை தங்கத்தால் ஆனது என்று கூறுகின்றனர். ஆனால், அவ்வாறு கிடையாது. இந்த முழு உலகமும் இலங்கை ஆகும். இது தீவு அல்லவா! முழு உலகத்தின் மீதும் இராவணனின் இராஜ்யம் நடக்கிறது. இதைக் கூட குழந்தைகளாகிய நீங்கள் புரிந்திருக்கிறீர்கள். கல்லூரியில் புத்தியற்றவர் எவராவது சென்று அமர்ந்தால் என்ன புரிந்து கொள்ள முடியும்? எதுவுமே புரியாது. நேரத்தை வீணாக்குவார்கள். இது ஈஸ்வரிய கல்லூரி ஆகும். இதில் புதிய மனிதர் எவரும் புரிந்துகொள்ள முடியாது. ஆகையினால் 7 நாட்கள் அவரை தனியாக அமர வைக்க வேண்டும். தகுதியாகும் வரை தனியாக அமர வைக்க வேண்டும். ஆனாலும் நல்ல மனிதர், தார்மீக மனம் படைத்தவர் என்றால் பரமபிதா பரமாத்மா உங்களுக்கு என்ன உறவு வேண்டும்? என்று அவரிடம் கேட்க வேண்டும். அவர் ஆத்மாக்களின்

தந்தை மற்றும் பிரஜா பிதாவும் கூட தந்தை ஆவார். இந்த (பாயிண்ட்) கருத்து மிக நல்ல கருத்து ஆகும். ஆனால், குழந்தைகள் இந்த விசயத்தில் அந்தளவு மகிழ்ச்சி அடைவதில்லை. உங்களுக்கு போதை ஏறும்படியாக புதுப்புதுக் கருத்துக் களை உங்களுக்குக் கூறுகின்றேன் என்று தந்தை கூறுகின்றார். பிறருக்கு புரிய வைப்பதற்கான யுக்தி தெரிய வேண்டும். பரமபிதா பரமாத்மாவுடன் உங்களுக்கு என்ன சம்பந்தம் உள்ளது? என்று நீங்கள் படிவத்தைப் பூர்த்தி செய்ய வைத்து கேட்க முடியும். பரமபிதா தந்தை ஆகிவிட்டார் அல்லவா! என்று கூறுவார்கள். பிறகு, அந்த சமயம் சர்வவியாபி என்ற ஞானமே தவறாகிவிடும். நீங்கள் கேள்வி கேட்கும்பொழுது அவர் தந்தை என்று கூறுவார் கள். நாம் அனைவரும் குழந்தைகள். இந்தளவு ஏற்றுக்கொண்டால் கூட எழுதி வாங்க வேண்டும். பிரஜாபிதாவிற்கும் நாம் குழந்தைகள் ஆவோம். அந்த சிவன் தாத்தா ஆகிவிட்டார் மற்றும் இவர் பாபா ஆகிவிட்டார். சிவபாபா சொர்க்கத்தை ஸ்தாபனை செய்யக்கூடியவர் என்றால் அவசியம் அவர் மூலம் தான் ஆஸ்தி கிடைக்கும். மிகவும் எளியதிலும் எளிய விசயங்களை எடுத்துக் கூற வேண்டியதாக உள்ளது. உற்றார், உறவினர்கள் போன்றோரிடம் செல்லுங்கள், அவர்களுக்கும் கூட இதைப் புரியவைத்திடுங்கள். நாம் பாப்தாதாவிடமிருந்து ஆஸ்தி அடை கிறோம் என்ற போதை உள்ளது அல்லவா! தாயிடமிருந்து ஆஸ்தி கிடைக்காது. தந்தை தான் சொர்க்கத்தை ஸ்தாபனை செய்ய வேண்டும் அல்லவா! அவரே எஜமானர். எவ்வாறு இவருக்கு தாத்தா சொத்தின் மீது உரிமை உள்ளதோ, அவ்வாறே பேரன், பேத்திகளுக்கும் கூட உரிமை உள்ளது. என்னை நினைவு செய்யுங்கள் என்று தந்தை கூறுகின்றார். இந்த தேகதாரியையும் நினைவு செய்யுங்கள் என்று கூறுவதில்லை. தந்தை எதிரில் இருந்து பேசிக் கொண்டி ருக்கின்றார். கல்பத்திற்கு முன்னரும் கூட அவ்வாறு புரியவைத்திருந்தார். ஆனால், குழந்தை களுக்கு தேக அபிமானம் அதிகம் வந்து விடுகிறது. தேகதாரிகள் மீது அன்பு வந்துவிடுகிறது. ஹே ஆத்மாக்களே! நீங்கள் அசரீரியாக வந்தீர்கள் பிறகு, நடிப்பு நடித்து இப்பொழுது 84 பிறவிகளை முடித்துவிட்டீர்கள், இப்பொழுது வீட்டிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்று நான் கூறுகின்றேன் என்று தந்தை கூறு கின்றார். என்னை நினைவு செய்தீர்கள் என்றால் விகர்மங்கள் விநாசம் ஆகும். தேகதாரியை நினைவு செய்வதனால் விகர்மங்கள் விநாசம் ஆகாது. பாபா, நாங்கள் உங்களை மட்டும் நினைவு செய்வோம் என்று நீங்கள் வாக்குறுதி கொடுக்கிறீர்கள். நீங்கள் இந்த பழைய உலகத்தில் இப்பொழுது இருக்கவே கூடாது. இங்கு சிறிதும் அமைதி இல்லை. ஆகை யினால், சுகம், சாந்தி இருக்கும் இடத்திற்கு எங்களை அழைத்துச் செல்லுங்கள் என்று கூறுகிறீர்கள். நாம் முதலில் சாந்திதாமத்திற்குச் செல்வோம் என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். அங்கே சுகத்தின் பெயரை எடுக்க மாட்டோம். சாந்தியே சாந்தியாக இருக்கும். பிறகு, சுகதாமத்திற்குச் செல்வோம். அங்கே பிறகு சாந்தியின் பெயரை எடுக்க மாட்டோம். எப்பொழுது துக்கம் உள்ளதோ அப்பொழுதே அசாந்தியும் உள்ளது. சுகத்திலோ சாந்தியும் உள்ளது. ஆனால், அது சாந்திதாமம் கிடையாது. சாந்திதாமம் ஆத்மாக்களின் இனிமையான வீடு ஆகும். தந்தை முழுமையான முதல், இடை, கடை நிலையைப் பற்றி அறிந்திருப்பவர் ஆவார். இப்பொழுது குழந்தைகளாகிய உங்களுடைய தொழிலே கற்பது மற்றும் கற்பிப்பதாகும். மேலும் பிறகு, தன்னுடைய சரீர நிர்வாகத்தின் பொருட்டு கர்மமும் செய்ய வேண்டும்.

நாம் இந்த மரண உலகத்திலிருந்து அமரலோகத்திற்கு சாந்திதாமம் வழியாகச் செல்வோம் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். எதுவரை நீங்கள் மாற்றலாகிச் செல்வீர் களோ அதுவரை இதை புத்தியில் நினைவு வைக்க வேண்டும். தன்னுடைய படிப்பின் முடிவு (ரிசல்ட்) வரை படித்திட வேண்டும். எதுவரை மரணம் வரவில்லையோ, அதுவரை படித்து தான் ஆக வேண்டும். இப்பொழுது நாம் வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்பதை நீங்கள் நினைவு செய்ய முடியும் அல்லவா ! இந்த உலகம், இந்த அனைத்தையும் விட்டுவிட வேண்டும். குஷி இருக்க வேண்டும். எல்லையற்ற நாடகத்தின் இரகசியத்தையும் கூடப் புரிந்துக் கொண்டீர்கள். எல்லைக்குட்பட்ட நாடகம் முடிவடைந்துவிட்டது என்றால் ஆடையை மாற்றிவிட்டு வீட்டிற்குச் சென்றுவிடுவார்கள். அவ்வாறே நாமும் செல்ல வேண்டும். 84 பிறவிகளின் சக்கரம் முடிவடைகிறது. ஹே! பதீதபாவனரே வாருங்கள் என்று நினைவும் செய்கின்றனர். சிவபாபாவை மட்டும் நினைவு செய்வார்கள். ஒருபுறம் பதீதபாவனரே வாருங்கள் என்று கூறுகின்றனர், மறுபுறம் பிறகு சர்வவியாபி என்று கூறிவிடுகின்றனர். எந்த அர்த்தமும் இல்லை. சாந்தி தாமத்தை நினைவு செய்யுங்கள் என்று குழந்தைகளுக்கு எவ்வளவு எளிய முறையில் புரியவைக்கின்றார். இது துக்கதாமம் ஆகும். இதன் விநாசம் கூட எதிரில் நிற்கிறது. இது அதே மகாபாரத யுத்தம் ஆகும். ஐரோப்பவாசி யாதவர்களும் உள்ளனர் மற்றும் கௌரவர்களும் பாண்டவர்களும் சகோதர சகோதரர்கள் ஆவர். நாம் ஒரே வீட்டைச் சேர்ந்தவர் கள் அல்லவா! சகோதர சகோதரர்களுக்கு இடையில் யுத்தம் ஏற்பட முடியாது. இங்கேயோ யுத்தத்திற்கான விசயமே கிடையாது. ஒருவருக்கு ஒருவர் சண்டை போட்டுக்கொள்வது மனிதர்களுடைய தொழில் ஆகும். இது ஒரு பழக்கம் ஆகும். அனைவரும் ஒருவருக்கு ஒருவர் எதிரியாக உள்ளனர். குழந்தை கூட தந்தையின் எதிரி ஆகிவிடுகின்றார். மரணலோகத் தில் அனைவருடைய பழக்க வழக்கமும் வெவ்வேறானது ஆகும். பாருங்கள், தந்தையின் திட்டம் எவ்வளவு பெரியது! அனைவருடைய திட்டங் களையும் முடித்துவிடுகின்றார் மற்றும் சுகதாமத்தை ஸ்தாபனை செய்கின்றார். மற்ற அனைவரையும் சாந்திதாமத்திற்கு அனுப்பிவிடு கின்றார். நாம் யாருக்கு எதிரில் அமர்ந்திருக் கின்றோம் என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் பார்க்கிறீர்கள். பரமபிதா பரமாத்மா ஞானக்கடல் ஆவார் என்ற நம்பிக்கை உள்ளது. இந்த அங்கங்கள் மூலமாக நமக்கு ஞானம் கொடுத்துக்கொண்டு இருக்கின்றார் மற்றும் இத்தகைய சத்சங்கம் வேறு எதுவும் இருக்குமா என்ன! இங்கே தந்தை எதிரில் அமர்ந்து புரியவைக்கின்றார். தந்தை ஆத்மாக்களாகிய நம்முடன் உரையாடிக்கொண்டு இருக்கின்றார். நாம் காதுகள் மூலம் கேட்கின்றோம். பாபா இந்த தாதாவின் வாய் மூலம் பேசுகின்றார். என்ன இரத் தினங்கள் பாபாவின் வாயிலிருந்து வெளிப்படுகின்றனவோ அதுவே குழந்தைகளாகிய உங்களுடைய வாயிலிருந்தும் வெளிப்பட வேண்டும். எப்பொழுதும் வாயிலிருந்து இரத்தினம் மட்டுமே வெளிப்பட வேண்டும். தவறான சைத்தான் விசயங்களைக் கேட்கவும் கூடாது. சிலரோ மிகவும் குஷியோடு அமர்ந்து கேட்கின்றனர். அத்தகைய விசயங்களை கேள்விப்பட்டாலோ அல்லது யாராவது செய்வதைப் பார்த்தாலோ பாபாவிடம் சொல்லுங்கள், சொன்னீர்கள் என்றால் பாபா அறிவுரை வழங்குவார் என்று தந்தை கூறுகின்றார். இல்லையெனில் அது (பழக்கம்) உறுதியாகிவிடும். ஆனால், அவ்வாறு நடந்துகொண்டே இருக்கின்றது. பாபா இவர்கள் தவறான விசயங்களை சொல்கின்றார்கள் என்பதை பாபாவிற்கு சொல்வதேயில்லை.

இதைத் தடுத்து விட்டால் பழக்கம் அழிந்துவிடும். தந்தை சபையில் புரியவைப்பார். ஆனால், அத்தகையவர்களுடன் நண்பர்கள் ஆகிவிடுகின்றனர். மாயை நல்ல நல்ல குழந்தைகளின் புத்தியைக் கூட கல்லாக்கிவிடுகிறது. தந்தை யினுடைய கட்டளைக்குக் கீழ்படியும் குழந்தை களாக ஆகுவதே யில்லை, இது மிகவும் நுட்பமான வழியாகும். இதில் மிகுந்த எச்சரிக்கை யுடன் இருக்க வேண்டும். கருணை உள்ளம் உடையவர் ஆகி யாரிடம் இந்த பழக்கம் இருக்கிறதோ அதை அழிக்க வேண்டும். ஆம் என்று சொல்லி கேட்கக் கூடாது.. பாபா, யார் சுகதாமத்தின் எஜமானன் ஆக்குகின்றாரோ, அத்தகைய பாபாவின் நிந்தனையை நாம் ஒரு பொழுதும் கேட்க மாட்டோம். நாமோ சிவபாபா விடமிருந்து ஆஸ்தி பெற வேண்டும். பிறகு, மற்ற விசயங்களோடு நமக்கு என்ன தொடர்பு உள்ளது? ஒருவர் கேட்டாலும் கேட்கா விட்டாலும் நாம் ஞானத்தின் மையைத் தீட்டிக் கொள்ள வேண்டும்.. சிலர் ஞானத்தின் மையைப் பெறுகின்றனர், சிலரோ தூசியைப் பெறுகின்றனர். இதன் மூலம் ஞானத்தின் மூன்றாவது கண் திறப்பதேயில்லை. ஒருவர் எத்தகைய நோயாளி, பார்வை யற்றவர், ஊனமுற்ற வராக இருந்தாலும் கூட புரிந்துகொள்ள முடியும் அளவிற்கு பாபா அவ்வளவு எளிமையாக்கிப் புரியவைக்கின்றார். தந்தை மற்றும் ஆஸ்தி - இரண்டு வார்த்தை கள் மட்டுமே உள்ளன. குழந்தைகளே! உற்றார், உறவினர்கள் போன்றோருடன் கூட நட்பு வைத்துக்கொள்ளுங் கள் என்று தந்தை புரியவைக்கின்றார். மிகவும் இனிமையானவர் ஆகுங்கள். உங்களுடைய வேலையே தந்தையின் அறிமுகத்தைக் கொடுப்பது ஆகும். எதிரியானாலும் கூட நட்பு பாராட்ட வேண்டும். மிகவும் இனிமையானவர் ஆக வேண்டும். நீங்கள் அசுரவழிப்படி நடந்து என்னை எவ்வளவு நிந்தித்துவிட்டீர்கள், எனக்கு அபகாரம் செய்தீர்கள், ஆனாலும் கூட நான் உங்களுக்கு எவ்வளவு உபகாரம் செய்கின்றேன் என்று தந்தை கூறுகின்றார். ஈஸ்வரனுக்கு அபகாரம் செய்யப் பட வேண்டும் என்பது கூட நாடகத்தின் பதிவினை ஆகும். ஆகையினாலேயே, எப்பொழுதெல்லாம் அதர்மம் அதிக மாகின்றதோ என்று கூறுகின்றனர். வந்திருப்பதும் பாரதத்தில் தான். புரிய வைத்துக் கொண்டும் இருக்கின்றார். குழந்தைகள் ஒவ்வொரு விசயத்தையும் நல்ல முறையில் புரிந்துகொள்ள வேண்டும். யாருக்கு அதிர்ஷ்டத்தில் இல்லையோ அவர்கள் பிறகு அதே அசுரத் தொழிலை செய்துகொண்டே இருப்பார்கள். இங்கிருந்து வெளியில் சென்றவுடன் இந்த விசயங் களை மறந்துவிடுவார்கள். நிந்தனை செய்து செய்து இந்த நிலைமை ஆகி விட்டது. இப்பொழுது நிந்தனை செய்வதை விட்டு விடுங்கள். உங்களுடைய பெயர் பிரஜாபிதா பிரம்மாகுமாரர்கள், குமாரிகள் என்று எழுதப் பட்டிருக்கிறது. இவர்கள் சிவனுடைய பேரன், பேத்திகள் ஆவார்கள் என்று புரிந்து கொள்வார்கள். அவசியம் சொர்க்கத்தின் ஆஸ்தி கிடைத்திருக்கும். பாரதத்திற்கு ஆஸ்தி கிடைத் திருந்தது, இப்பொழுது இல்லை, பிறகு இப்பொழுது கிடைக்கிறது. சத்யுகத்தில் சூரிய வம்சத்தினர் மட்டுமே இருந்தனர். இப்பொழுது நீங்கள் தந்தையை நினைவு செய்தீர்கள் என்றால் விகர்மங்கள் வினாசம் ஆகிவிடும், மேலும், அங்கே சென்றுவிடுவீர்கள். எவ்வளவு நல்ல முறையில் புரியவைக்கின்றார். குழந்தை களாகிய நீங்களும் கூட சேவை செய்ய வேண்டும். ஆனால், முதலில் தன்னுடைய விருத்தி (உள்ளுணர்வு) நன்றாக இருக்க வேண்டும். பண்டிதராக மட்டும் இருக்கக்கூடாது. பக்கா (உறுதியான) யோகி, இராஜரிஷியாக இருந்தீர்கள் என்றால் பிறருக்கு அம்பு தைத்து விடும். தனக்குள்ளேயே ஏதாவது குறை இருந்தது என்றால் பிறருக்கு சொல்ல முடியாது. வெட்கம் வரும், தன்னுடைய பாவம்

மனதிற்குள்ளே உறுத்திக்கொண்டே இருக்கும். ஒவ்வொரு விசயத்தையும் பாபா மிக நன்றாகப் புரியவைக்கின்றார். கல்பத்திற்கு முன்பும் இவ்வாறே புரியவைத்திருந்தார். யாரும் படித்தாலும், படிக்கவில்லை என்றாலும் தேவி தேவதை தர்மம் அவசியம் ஸ்தாபனை ஆகும். கொஞ்சம் புத்திசாலி ஆகுங்கள் என்று தந்தை கூறுகின்றார். இந்த வருமானம் மற்றும் அந்த வருமானத்தை புத்தியில் வைத் திடுங்கள். உண்மையான வருமானத்தை பாபா தான் செய்விக்கின்றார். தந்தை மற்றும் சொர்க்கத்தை நினைவு செய்ய வேண்டும், இதை மறக்காதீர்கள். நினைவு செய்து செய்து கடைசியில் என்ன நினைவோ, அந்த நிலை (அந்த் மதி சோ கதி) ஆகிவிடும். அதிகாலையில் எழுந்து தந்தையின் நினைவில் அமருங்கள். ஒருவேளை சோம்பேறித்தனம் வருகிறது என்றால் அதிர்ஷ்டத்தில் இல்லை என்று புரியவைக்கப்படுகின்றது. இறுதியில் தேகம் கூட நினைவு வரக்கூடாது, இத்தகைய பயிற்சி செய்ய வேண்டும். நாம் ஆத்மாக்கள் ஆவோம். நல்லது.

இனிமையிலும் இனிமையான வெகு காலத்திற்குப் பிறகு தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாய், தந்தை பாப்தாதாவினுடைய அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்காக முக்கியமான சாரம்:

1. தன்னுடைய விருத்தியை சுத்தமாக வைத்து எதிரியைக் கூட நண்பன் ஆக்க வேண்டும். அபகாரியின் மீதும் கூட உபகாரம் செய்து தந்தையின் உண்மையான அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும்.

2. என்ன இரத்தினங்கள் பாபாவின் வாயிலிருந்து வெளிப்படுகின்றனவோ, அதே இரத்தினங்களை வெளிப்படுத்த வேண்டும். எந்தவித வீணான விசயங்களை கேட்கவும் கூடாது, சொல்லவும் கூடாது.

வரதானம் : சங்கமயுகத்தின் சமயத்தின் மகத்துவத்தை அறிந்து பரமாத்ம ஆசிகளால் பையை நிரப்பி விடும் (மாயாஜீத்) மாயையை வென்றவர் ஆவீர்களாக.

சங்கமயுகத்தின் ஒரு நொடி கூட மற்ற யுகங்களின் ஒரு வருடத்தை விடவும் அதிக மானது ஆகும். இச்சமயத்தில் ஒரு நொடியை கூட இழந்தீர்கள் என்றால், அது ஒரு நொடி அல்ல, ஆனால் நிறையவே இழந்து விட்டீர்கள். இந்த அளவிற்கு மகத்துவம் எப்பொழுதும் நினைவில் இருந்தது என்றால், ஒவ்வொரு நொடியும் பரமாத்ம ஆசிகளை பெற்றுக் கொண்டே இருப்பீர்கள். மேலும் யாருடைய பை பரமாத்ம ஆசிகளில் எப்பொழுதும் நிரம்பி உள்ளதோ, அவர்களிடம் ஒரு பொழுதும் மாயை வர முடியாது. தூரத்திலிருந்தே ஓடிப் போய் விடும். எனவே காலத்தை மிச்சப்படுத்துவது - இதுவே தீவிர புருஷார்த்தம் (முயற்சி) ஆகும். தீவிர புருஷார்த்தி (முயற்சியாளர்கள்) என்றால், எப்பொழுதும் மாயாஜீத் ஆக (மாயையை வென்றவர்கள்) இருப்பவர்கள்.

சுலோகன்: யார் கட்டளைப்படி நடப்பவர்கள் (ஆக்ஞாகாரி) ஆவார்களோ, அவர்களே தந்தையின் மற்றும் பரிவாரத்தின் ஆசிகளுக்கு பாத்திரமானவர்கள் ஆவார்கள்.